**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 101 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 10** |
| **Name** | : | திரு. சேகர் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 3173 of the day of **08.04.2022**

<u>முதல் விசாரணை :</u>

நான் பழைய மீனாட்சிநகர்,புது ராம்நாடு ரோட்டில் குடியிருந்து வருகிறேன். டீக்கடையில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. எனது அம்மா மீனாட்சி நகரில் குடியிருந்தார். எந்த சந்து என்று தெரியாது. போலிசார் வரச் சொன்னதன் பேரில் தற்போது நீதிமன்றத்திற்கு வந்தேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

<u>அரசு தரப்பில் கு.வி.</u>

எனது தாயார் பெயர் இந்துமதி. எனது சின்னதம்பி கணேஷ் என்பவருடன் எனது தாயார் குடியிருந்தார். எனது மனைவி பெயர் இந்துமதி. எனது சின்னத்தம்பியையும், தாயாரும் தனியாக குடியிருக்கிறார்கள். எனது தங்கைகள் பெயர், ராஜேஸ்வரி, பூர்ணிமா, குணவதி ஆகியோர் ஆவார்கள். நான், எனது தங்கைகள், எனது தங்கை கணவர்கள் ஆகியோர் எனது

தாயாரைப் பார்க்க அடிக்கடி செல்வோம். தீபாவளி பொங்கல் போன்ற விழாக்களுக்கு நாங்கள் செல்ல மாட்டோம். எனது அம்மா, தம்பி கணேசன் மற்றும் எதிரி ஆகியோர் கீழேயும், மேலேயும் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. பொங்கல் முடிந்து மறுநாள் 16.01.2016 அன்று நான் எனது அம்மாவை பார்க்க சென்றேன் என்றால் சரியல்ல. எனது அம்மா மகாத்மா காந்தி தெருவில் குடியிருந்தார் என்றால் எனக்கு சந்து பெயர் தெரியாது. எனது அம்மா குடி இருந்த வீட்டின் மாடியில், ரோசி என்பவர் எதிரியிடம் என்னை சுத்தியலால் அடிக்காதீங்க அடிக்காதீங்க என்று சத்தம் போட்டார் என்றும் நாங்கள் சென்று பார்க்க போனோம் என்றால் சரியல்ல. நாங்கள் மேலே சென்று பார்க்க சென்ற போது ஆஜர் எதிரி கையில் சுத்தியலுடன் கீழே வந்தார் என்றும் நான் எனது மனைவியை அடித்துவிட்டேன் என்றும் என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், நான் தான் இறந்த ரோசியை உடம்பு சரியில்லாத நிலையில் மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருப்பவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் கு.வி.**</u>

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,<br>மகளிர் நீதிமன்றம்,<br>மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 101 / 2017** | | |
| **Deposition of witness for** | : | **PW** | **:** | **11** |
| **Name** | : | திரு. சசிக்குமார் | | |
| **Father's Name** | : | | | |
| **Village** | : | | | |
| **Taluk** | : | | | |
| **Caste** | : | | | |
| **Calling** | : | | | |
| **Religion** | : | | | |
| **Age** | : | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 3173 of the day of **08.04.2022**

**முதல் விசாரணை :**

நான் பழைய மீனாட்சிநகர்,புது ராம்நாடு ரோட்டில் குடியிருந்து வருகிறேன். டீக்கடையில் வேலை செய்கிறேன். அசா10 எனக்கு மச்சான். ஆஜர் எதிரியைத் தெரியாது. எனது மாமியார் மீனாட்சி நகரில் குடியிருந்தார். எந்த சந்து என்று தெரியாது. போலிசார் வரச் சொன்னதன் பேரில் தற்போது நீதிமன்றத்திற்கு வந்தேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**அரசு தரப்பில் கு.வி.**

போலிஸ் விசாரணையில், தீபாவளி பொங்கல் போன்ற விழாக்களுக்கு நாங்கள் எனது மாமியாரை பார்க்க செல்ல மாட்டோம். எனது மாமியார், மைத்துனர் கணேசன் மற்றும் எதிரி ஆகியோர் கீழேயும், மேலேயும் குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. பொங்கல் முடிந்து மறுநாள் 16.01.2016 அன்று நான் எனது மாமியாரைப் பார்க்க சென்றேன் என்றால் சரியல்ல. எனது

மாமியார் மகாத்மா காந்தி தெருவில் குடியிருந்தார் என்றால் எனக்கு சந்து பெயர் தெரியாது. எனது மாமியார் குடி இருந்த வீட்டின் மாடியில், ரோசி என்பவர் எதிரியிடம் என்னை சுத்தியலால் அடிக்காதீங்க அடிக்காதீங்க என்று சத்தம் போட்டார் என்றும் நாங்கள் சென்று பார்க்க போனோம் என்றால் சரியல்ல. நாங்கள் மேலே சென்று பார்க்க சென்ற போது ஆஜர் எதிரி கையில் சுத்தியலுடன் கீழே வந்தார் என்றும் நான் எனது மனைவியை அடித்துவிட்டேன் என்றும் என்னிடம் சொன்னார் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், நாங்கள் தான் இறந்த ரோசியை உடம்பு சரியில்லாத நிலையில் மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருப்பவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை